*7*

# ஜீவனைப் பாதுகாத்த ஒரு மனிதர்

## [2 இராஜாக்கள் 8:1–6]

எலிசா மற்றும் சூனேமியா ஆகியோருடைய கதை சம்பவம் தேவனுடைய தீர்க்கதரிசியை ஒரு ஜீவனைக் கொடுக்கிறவர், ஜீவனை உயிர்ப்பிக்கிறவர் மற்றும் ஜீவனைப் பாதுகாக்கிறவர்[1] என நமக்கு காண்பிக்கிறது. அவனுக்கு உபசரிப்பு செய்த பெண் ஆண் குழந்தையால் ஆசீர்வதிக்கப்பட்டபோது, அவனை ஜீவனை கொடுத்தவராக கண்டோம். தேவனுடைய வல்லமையால் அந்த பையனை அவர் உயிர்ப்பித்த போது, அவரை ஜீவனை உயிர்ப்பிக்கிறவராக கண்டோம். இந்த பாடத்தில் நாம் இவரை ஜீவனைப் பாதுகாக்கிறவராகக் காண்போம். ஏனெனில், தேவன் அவனுடைய வார்த்தைகளையும் செல்வாக்கையும் அந்த பெண் மற்றும் அவள் மகனைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தினார்.

இந்த எல்லா நிகழ்வுகளிலும் *கர்த்தர்* தான் உண்மையில் ஜீவனைக் கொடுத்தார். ஜீவனை உயிர்ப்பித்தார் மற்றும் ஜீவனைப் பாதுகாத்தார் என்பதை மறந்துவிடாதீர்கள்; எலிசா வெறுமனே அவருடைய முகவராக செயல்பட்டார். தேவனானவர் இன்றும் நம் ஜீவனின் மூலாதாரமாக *இன்னும்* இருக்கிறார். அவர் சரீர ஜீவனின் மூலாதாரமாக இருக்கிறார்: அவர், “எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் ... கொடுக்கிறவர்” என பவுல் எழுதினார் (நடபடுகள் 17:25). அவர் ஆவிக்குரிய ஜீவனின் மூலாதாரமாக இருக்கிறார்: “நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” என இயேசு வலியுறுத்தி கூறினார் (யோவான் 10:10). அந்த சூனேமியப் பெண்ணைப்போல, மறுபடியும் மறுபடியும் நாம் “ஜீவனுள்ள தேவனால்” ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் (1 தீமோத்தேயு 4:10). நாம் இந்தப் பாடத்தை நிறைவு செய்வதற்கு முன்பாக, நீங்கள் இந்த கிருபை நிறைந்த தேவனுடைய அளிப்புகளை உங்களுக்கு அனுகூலமாக எடுத்துக் கொண்டீர்களா இல்லையா என நான் கேட்பேன்.

### பஞ்ச காலத்தில் தேவனுடைய பாதுகாப்பு (8:1, 2)

இந்தப் பாடத்திற்காக நாம் 2 இராஜாக்களின் பல அதிகாரங்களை விட்டுவிட்டு, அதிகாரம் 8க்கு செல்கிறோம். எலிசா சூனேமியாளின் மகனை உயிர்ப்பித்து பல ஆண்டுகளாகிவிட்டன. இந்த காலத்தில், எலிசா மற்றும் கேயாசி ஆகியோர் நிச்சயம் அந்த பெண் கொடுத்த உபசரிப்பைத் தொடர்ந்து அனுபவித்து வந்தார்கள். மேலும் இந்த ஆண்டுகளில், அந்த பெண்ணின் வயதான கணவர் அநேகமாக மரித்துவிட்டார்.[2]

இந்த கதை துவங்குகையில், எலிசா தன் உபசரிப்பால் தேவனுக்குப் பணிவிடை செய்த அந்த பெண்ணை முகம்முகமாய் சந்திக்கிறான். அநேகமாக கர்மேலுக்கு செல்லும் வழியில் அல்லது அங்கிருந்து திரும்பும் வழியில் அங்கே தன்

பயணத்தை நிறுத்தினான். "எலிசா தான் உயிர்ப்பித்தப் பிள்ளையின் தாயாகிய ஸ்திரீயை நோக்கி: நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப்போய் எங்கேயாகிலும் சஞ்சரி; கர்த்தர் பஞ்சத்தை[3] வருவிப்பார்; அது ஏழுவருஷம் தேசத்தில் இருக்கும் என்று சொல்லியிருந்தான்" (வசனம் 1).

"*கர்த்தர்* பஞ்சத்தை" வருவிப்பார் என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். பஞ்சம் என்பது ஒரு தெய்வீக தண்டனையாயிருந்தது. தேவன் ஜனங்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் முதல் கட்டளை, "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்பதாயிருந்தது (யாத்திராகமம் 20:3), ஆனால் வடராஜ்யம் அந்த கட்டளையை புறக்கணித்துவிட்டது.

> "இவ்விதமாய் ... நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து ... உங்கள் வானத்தை இரும்பைப்போலவும் உங்கள் பூமியை வெண்கலத்தை போலவும் ஆக்குவேன் ... உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கமாட்டது" என கர்த்தர் எச்சரித்திருந்தார் (லேவியராகமம் 26:18-20).

தேவன் தமது ஜனங்களை தண்டிக்கவும் (காண்க ஆகாய் 1:9-11) அவர்களை மனந்திரும்ப அழைக்கவும் பஞ்சத்தைப் பயன்படுத்தினார் (காண்க 1 இராஜாக்கள் 8:35-40). தேவன் எலியாவின் நாட்களில் ஒரு மூன்றரை ஆண்டு பஞ்சத்தை அனுப்பியிருந்தார் (காண்க 1 இராஜாக்கள் 17:1; யாக்கோபு 5:17); அவர் அதை இப்போது இரட்டிப்பாக்குவார்: இந்த பஞ்சம் ஏழு ஆண்டுகள் நீடித்திருக்கும் (ஒப்பிடுக ஆதியாகமம் 41:27). எலிசா வரவிருக்கும் பெரிய நாசத்தின் கஷ்டத்திலிருந்து அந்த பெண்ணை காப்பாற்ற விரும்பினார். அவர் அவளிடத்தில் குடும்பத்தாரோடு வெளியேறி, பஞ்சம் முடிகிறவரை வேறு ஒரு இடத்தில் வாழும்படி கூறியிருந்தார் (ஒப்பிடுக ரூத் 1:1, 6).

"விக்கிரக வழிபாட்டினிமித்தம் தேசத்தின் மேல் தண்டனை வந்ததானால், அது இந்த பெண்ணின்மேல் ஏன் வரவேண்டும்? அவள் விக்ரக ஆராதனையால் குற்றப்படவில்லையே" என்ற ஒரு ஆட்சேபனை எழுகிறது. நீங்கள் இந்தப் பாடத்தை இதுவரை கற்றுக்கொள்ளாமலிருந்தால், நீங்கள் இப்போது கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது: மனுக்குலம் யாவும் ஒன்றாக கட்டப்பட்டுள்ளது (காண்க ரோமர் 14:7), மேலும் ஒருவரை எது பாதிக்கிறதோ அது மற்றவரையும் பாதிக்கிறது. பாவம் இந்த உலகத்தை சபித்துவிட்டது (காண்க ஆதியாகமம் 2:17; ரோமர் 5:12), மற்றும் அதினால் நாம் யாவரும் பாடுபடுகிறோம் - நிரபராதியும் குற்றவாளியோடு பாடுபடுகிறார். இந்த உண்மைக்கான உதாரணங்கள் என் மனதை நிரப்பியிருக்கின்றன. ரோமானியாவில் கிருமி நீக்கம் செய்யப்படாத ஊசிகளால் தடுப்பூசி போட்டுக்கொண்ட குழந்தைகள் எய்ட்ஸ் நோயை பெற்றதும் இதில் அடங்கும். எலிசா இந்த பெண் தேசத்தினுடைய பாவத்தின் சில விளைவுகளிலிருந்து தப்பியிருக்கும்படி விரும்பினார். ஆகவே அவள் இஸ்ரவேலை விட்டுப் போகும்படி கேட்டுக்கொண்டார்.

சூனேமியாளுக்கு, தீர்க்கதரிசியின் அறிவுரைகள் கீழ்ப்படிவதற்கு சுலபமாக இருந்திருக்காது. அவள் தன் குடும்பம் மற்றும் நண்பர்களுடன், இருந்த இடத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தாள் (காண்க 2 இராஜாக்கள் 4:13). மேலும்

எலிசா பேசிய அந்த காலகட்டத்தில், அங்கு பஞ்சத்துக்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை: புற்கள் பசுமையாயிருந்தன, பூக்கள் பூத்து குலுங்கின, வயல்கள் இன்னும் தானியத்தை விளைவித்தன. அவளுடைய முழு குடும்பத்தையும் வேறு ஒரு நாட்டிற்கு குடிபெயரச் செய்வது என்பது ஒரு விசுவாசத்தின் கிரியையாக மட்டுமே இருக்கும். முன்னதாக, அந்த பெண் தீர்க்கதரிசியின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதற்கு தடுமாறினாள் (2 இராஜாக்கள் 4:16, 28). ஆனால் இப்போது அவள் தயங்கவில்லை. அவள், "தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தையின்படி செய்து, தன் வீட்டாரோடுங்கூட புறப்பட்(டாள்)" (2 இராஜாக்கள் 8:2அ). நிகழ்ந்த சோகங்களும் அதன் பின் விளைவுகளும் அவள் விசுவாசத்தைப் பெலப்படுத்தியிருந்தன. நமக்கும் உபத்திரவங்கள் இதை செய்யக்கூடும் (காண்க ரோமர் 5:3, 4; யாக்கோபு 1:2, 3).

அவள், "தன் வீட்டாரோடுங்கூடப் புறப்பட்டு, பெலிஸ்தரின் தேசத்தில் போய் … சஞ்சரித்தாள்" (2 இராஜாக்கள் 8:2ஆ). பெலிஸ்தியர்கள் தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதிகளாயிருந்தார்கள் (காண்க 1 சாமுவேல் 4:10; 13:5); ஆனால் நமது கதையின் இந்த காலகட்டத்தில், இஸ்ரவேல் ஆராமுக்கு எதிராக (சீரியா) யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது (2 இராஜாக்கள் 5:2; 6:8, 24), பெலிஸ்தியருக்கு எதிராக அல்ல. "பெலிஸ்தியரின் தேசம்" கடற்கரையில் அமைந்திருந்தது (வரை படத்தை காண்க). பஞ்சகாலத்தில், மலைசார்ந்த உட்பிரதேசத்தைப் போல், வளமான பெலிஸ்திய சமவெளி பிரதேசம் அதிகம் பாதிக்கப்படாது. மேலும், அந்த மக்கள் தங்களுக்கு தேவையான சரக்குகளை கடலிலிருந்து பெறுவது சாத்தியமாயிருந்தது. ஆகவே, அந்த பெண் அங்கே குடிப்பெயரத் தீர்மானித்தாள் (2 இராஜாக்கள் 8:2இ).

## தவறாக நடத்தப்பட்டபோது தேவனுடைய உதவி (8:3-6)

"ஏழுவருஷம் சென்ற பின்பு," பஞ்சம் நீங்கினபின்பு, அவள் பெலிஸ்தரின் தேசத்தை விட்டுத் திரும்ப வந்து … (வசனம் 3அ). அவள் சூனேமுக்கு வந்தபோது, அவள் அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். வேறு ஒரு குடும்பம் அவள் வீட்டில் வசித்துக்கொண்டிருந்தது! வேறு யாரோ அவள் வயலில் வேலை செய்துகொண்டிருந்தார்கள்! மனச்சாட்சி இல்லாத அயலகத்தார் அல்லது பேராசையுள்ள உறவினர்கள் அந்த சொத்தை அபகரித்துவிட்டார்கள், அல்லது அது அரசரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது (காண்க 1 இராஜாக்கள் 21:15). ஆதரவற்ற விதவைகள் எப்போதுமே இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள் (காண்க ஏசாயா 10:2; மத்தேயு 23:14).

முன்னதாக, எலிசா அந்த பெண்ணின் சார்பாக இராஜாவிடம் பேச விருப்பம் தெரிவித்திருந்தான் (2 இராஜாக்கள் 4:13), ஆனால் அதை அவள் நிராகரித்திருந்தாள். இப்போது, அவள் தாமாகவே தன் சொத்தைத் திரும்ப பெறும் முயற்சியில் ராஜாவிடம் மன்றாட வேண்டியிருக்கிறது (8:3ஆ). டொனால்ட் வைஸ்மேன் என்பவரின் கூற்றுப்படி, "நிலவழக்குகளின் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் அரசர் இருந்தார்."[4] அந்த பெண் தன் கோரிக்கையை வைக்க ஆயத்தப்படுகையில், அநேகமாக அவள் அச்சப்படுபவளாக இருந்தாள். நடைமுறையில், பெண்களின் வார்த்தைகளுக்கு அரச சமூகத்தில் சிறிதளவே மதிப்பிருந்தது.

தேவன் தனக்காக வழியை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார் என்பதை சூனேமியாள் அறியாதிருந்தாள். அவள் ராஜா சமூகத்திற்கு செல்கையில், "அந்நேரத்தில் ராஜா, தேவனுடைய மனுஷனின் வேலைக்காரனாயிருந்த கேயாசியுடன் பேசி ..." (வசனம் 4அ). கேயாசி ஏன் அங்கிருந்தார் என்பது நமக்கு தெரியவில்லை. ஒருவேளை, எலிசா ராஜாவுக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கலாம். ஒருவேளை ராஜா தீர்க்கதரிசியின் செயல்பாடுகளில் ஆர்வமுற்று, அதை அதிகம் அறிந்துகொள்ள அவன் வேலைக்காரனை வரவழைத்திருக்கலாம்.[5] காரணம் எதுவாயிருப்பினும், கேயாசி ராஜாவோடிருந்தான் மற்றும் அவர், "எலிசா செய்த அதிசயங்களையெல்லாம் நீ எனக்கு விபரமாய் சொல்" என்றான் (வசனம் 4ஆ).

அந்த ராஜா யாராக இருந்தார் என்பது நமக்கு உறுதியாக தெரியவில்லை. "ஏழு வருடம் பஞ்சம் யோராம் ஆட்சியின் மத்தியில் ஏற்பட்டிருந்தது"[6] ஆகவே 2 இராஜாக்கள் 8:1-6இல் குறிப்பிடப்பட்ட ராஜா யோராமாக இருந்தார். யெகூ என்றழைக்கப்பட்ட பிந்திய ராஜாவாகவும் அவர் இருந்திருப்பது சாத்தியமானது.[7] உண்மையில், *யார்* ராஜாவாய் இருந்தார் என்பது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை.[8] இந்த வசனப்பகுதியின் தேவனுடைய நோக்கம் ராஜாக்களை காட்சிப்படுத்துவதல்ல, ஆனால் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை எவ்விதம் பலனளிக்கப்படுகிறதென்பதை விளங்கப்பண்ணுவதாக இருந்தது.

யோராம் அரசராக இருந்திருந்தால், எலிசா தன் இராணுவத்தை ஏதோமின் வனாந்திரத்தில் எப்படி காப்பாற்றினார் என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருந்தார். மற்ற அற்புதங்கள் பற்றியும் அவர் கேள்விப்பட்டிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை. இப்போது அவர் அது பற்றிய முழு விபரங்களையும் கேட்டார். ராஜா இவ்வளவு ஆர்வமாய் தன்னிடம் கேட்டது குறித்து கேயாசி மெய்சிலிர்த்துப்போனார். எலிசா எவ்விதம் மாசுப்பட்ட தண்ணீரை நன்னீராக்கினார் என்பதை, தீர்க்கதரிசி எவ்விதம் கொஞ்சம் எண்ணெயை பெருகச் செய்தார் என்பதை மற்றும் தன் வழுக்கை தலையை கேலிசெய்த இளம் விஷமிகள்மேல் தண்டனை வர எப்படி காரணமாயிருந்தார் என்பதையெல்லாம் அவன் ராஜாவிடம் கூறுவதை நான் கற்பனை செய்கிறேன் (ராஜாவுக்கு வழுக்கைத் தலை இருந்திருந்தால், அவர் அந்த கடைசி கதையை ரசித்திருப்பார்). எலிசா எவ்விதம் மரித்த பையனை உயிர்ப்பித்தார் என்பதுதான் அவன் கூறியவைகளில் முக்கியமானதாகும்! அற்புதங்களை செய்கிறவர்கள் மத்தியில் கூட மரித்தோரை உயிர்ப்பிப்பது என்பது ஒரு அன்றாட நடவடிக்கையாக இருக்கவில்லை. மரித்தோர் உயிர்ப்பிக்கப்பட்டதற்கான மூன்று பதிவுகள் மட்டுமே பழைய ஏற்பாட்டில் உள்ளன (1 இராஜாக்கள் 17; 2 இராஜாக்கள் 4; 13), இவைகளில் இரண்டு எலிசாவுடன் தொடர்புடையவைகள்.

கேயாசி உணர்ச்சி மேலிட்டவராக சம்பவங்களை சொல்லிக் கொண்டிருந்தபோது, வேறுயாருமல்ல, அந்த பெண் மற்றும் அவள் மகன் ஆகிய இருவரும் ராஜாவின் சிங்காசன அறையில் உட்பிரவேசித்தார்கள் (2 இராஜாக்கள் 8:5அ)! அது ஒரு தற்செயலான இணை நிகழ்ச்சியாக இருக்கவில்லை, ராஜா அந்த பெண்ணின் காரியத்தில் நல் அபிப்பிராயம் உருவாகவும், அதினால் அவள் வேண்டுகோளை அவர் பரிசீலிக்கவும் தேவனானவர் செய்த ஏற்பாடுகளாயிருந்தன. இதை நாம் தேவனுடைய *தெய்வாதீனமான* உதவி என அழைக்கிறோம் (ரோமர் 8:28): தேவன் இயற்கை நியதிகள் வாயிலாக தம்

மக்களின் தேவைகளை சந்திப்பதாக இருக்கிறது. அவருடைய வழிகள் எவ்வளவு ஆச்சரியமானவைகளாக இருக்கின்றன!

கேயாசி அந்த பெண்ணை பார்ப்பதில் ஆச்சரியப்பட்டார். அவர் அவளைச் சுட்டிக்காண்பித்து, உணர்வு மேலிட்டவராய் "இராஜாவாகிய என் ஆண்டவரே, *இவள்தான்* அந்த ஸ்திரீ; எலிசா உயிர்ப்பித்த இவளுடைய குமாரன் இவன்தான்" என்றான் (2 இராஜாக்கள் 8:5ஆ; வலியுறுத்தல் என்னுடையது). "நீங்களே அவளை கேளுங்கள்!" என்பது உணர்த்தப்பட்ட ஆலோசனையாயிருக்கிறது. ஆட்சியாளர் கதையை உறுதி செய்துகொள்ள அவளிடம் கேட்டார். அநேகமாக, அந்த பெண் தன் முகத்தில் புன்முறுவலை உடையவளாய், தன் அன்பு மகன் மேல் தன் கரங்களை போட்டவளாய், அவள் உதடுகளிலிருந்து அடிக்கடி வந்த அந்த கதையை மறுபடியும் சொன்னாள் (வசனம் 6அ).

ராஜா மிகவும் திருப்தியடைந்தார். "தனது தீர்க்கதரிசிகள் மூலமாக கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்தவர்கள், எவ்விதமாக கர்த்தருடைய உதவி மற்றும் ஆசீர்வாதங்களை பெற்றார்கள் என்பதற்கு இந்த விதவை மற்றும் அவள் மகன் ஆகியோர் வாழும் முன் உதாரணங்களாய் இருந்தார்கள்."[9] ஜீவன் மற்றும் மரணத்தின்மேல் அதிகாரம் பெற்றிருந்த ஒரு மனிதனோடு நெருக்கமாக உறவு கொண்டிருந்த அந்த பெண்ணுக்கு தயவு செய்ய ராஜா தீர்மானித்தார். உண்மையில், அவள் கேட்டதற்கும் *அதிகமாக* செய்ய ராஜா தீர்மானித்தார். அவள் தனது சொத்து தனக்கு திருப்பித்தரப்பட வேண்டுமென கேட்டாள்; அவர் அதினால் ஏற்பட்ட லாபத்தையும் அவளுக்கு திருப்பித்தருவார்.[10] அப்பொழுது ராஜா அவளுக்கு ஒரு "பிரதானியை நியமித்து," "அவளுக்கு உண்டானது எல்லாவற்றையும், அவள் தேசத்தை விட்டுப்போன நாள்முதல் இதுவரைக்கும் உண்டான அந்த வயலின் வருமானம் அனைத்தையும் அவளுக்கு கிடைக்கும்படி செய்" என்றார் (வசனம் 6ஆ).

அந்த பெண் உண்மையில் மகிழ்ச்சியோடு அரசரின் அரண்மனையை விட்டு சென்றாள். அவளுடைய வயல் அவளுக்கு திருப்பி கொடுக்கப்பட்டு விட்டது, எலிசாவோடு இருந்த ஐக்கியத்திற்காக நன்றி. இப்போது அந்த தீர்க்கதரிசிக்கு அவள் வீட்டில் இருமடங்கு வரவேற்பு கிடைத்தது பற்றியும், அவர் அந்த கிராமத்தின் வழியாய் பயணித்த போது, அங்கே தொடர்ந்து மகிழ்ச்சியான நேரங்களை செலவிட்டார் என்பது பற்றியும் நாம் நம்பிக்கையுடையவர்களாயிருக்கலாம். இந்த ஆர்வமான குறிப்போடு, உணர்வைத் தூண்டும் இந்த எலியா மற்றும் சூனேமியாள் ஆகியோருடைய கதையை நிறைவு செய்ய வேண்டும்.

## முடிவுரை

நான் இந்தப் பாடத்தை நிறைவு செய்கையில், நம் *தேவன் நமக்கு* ஜீவனைக்கொடுக்கிறவராக, ஜீவனை உயிர்ப்பிக்கிறவராக, மற்றும் ஜீவனைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இந்த மூன்று கருத்துக்களை நாம் நமது சரீரபிரகாரமான ஜீவனுக்குப் பொருத்தப்பார்க்கலாம்: தேவன் நமது பிறப்பில் நமக்கு சரீரபிரகாரமான ஜீவனை அருளுகிறார் (காண்க ஆதியாகமம் 2:7; நடபடிகள் 17:25), அவர் தமது இரக்கமுள்ள ஆசீர்வாதங்களால் நம் சரீர ஜீவனை போஷிக்கிறார் (மத்தேயு 5:45), மற்றும் ஒரு நாளில் அவர் மரித்தோரின் ஜீவனை உயிர்ப்பிப்பார் (யோவான்

*5:28, 29). எப்படியிருப்பினும், ஆவிக்குரிய வாழ்க்கைத் தொடர்பாக, சிறப்பான விதத்தில் இதை பொருத்திப்பார்க்க விரும்புகிறேன்:*

- *தேவன் ஆவிக்குரிய ஜீவனின் மூலாதாரமானவராக இருக்கிறபடியால், அவரே நமக்கு ஆவிக்குரிய ஜீவனைக்கொடுக்கிறார் (காண்க யோவான் 17:3). அவருடைய கிருபையினால், பாவத்தில் மரித்தோர் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள் (எபேசியர் 2:5).*
- *தேவன் ஆவிக்குரிய ஜீவனைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார். பவுல், "ஏனென்றால், நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என்றார் (2 தீமோத்தேயு 1:12).*
- *தேவன் நம் ஆவிக்குரிய ஜீவனை உயிர்ப்பிக்கிறவராக இருக்கிறார். நாம் நமது பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரண்டை வரும்போது, அவர் இரட்சிப்பின் சந்தோஷத்தை நமக்கு திரும்பக் கொடுப்பார் (காண்க சங்கீதம் 51:12).*

*தேவன் நீங்கள் ஜீவனை உடையவராக இருக்க விரும்புகிறார் ... ஆனால் நீங்கள் அவருடைய தாராளமான ஈவுகளை உங்களுக்கு அனுகூலமாக்கிக் கொண்டீர்களா?*

- *"கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை" பெறும்படி (ரோமர் 6:23), நீங்கள் ஒரு உணர்வடைந்த பாவியாக (நடபடிகள் 2:36-38), "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானம் பண்ணப்பட்டீர்களா? (ரோமர் 6:3; கலாத்தியர் 3:26, 27).*
- *கர்த்தர் உங்களை ஒவ்வொரு நாளும் பெலப்படுத்தும் படியாக (எபிரெயர் 13:5, 6); அவர் உங்கள் பாவங்களை நீக்கி சுத்திகரிக்கத்தக்கதாக (1 யோவான் 1:7); நீங்கள் "புதிதான ஜீவன்" உள்ளவர்களாக அவரோடு நடக்கிறீர்களா? (ரோமர் 6:4).*
- *நீங்கள் நீதியின் மார்க்கத்திலிருந்து தப்பிப்போயிருந்தால் (யாக்கோபு 5:19, 20), நீங்கள் மனந்திரும்பி, அறிக்கையிட்டு மற்றும் ஜெபித்து கர்த்தரிடம் திரும்பிவிட்டீர்களா? (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9), அப்போது அவர் உங்கள் ஆத்துமாவை சீர்பொருந்தப்பண்ணுவார் (காண்க கலாத்தியர் 6:1; சங்கீதம் 80:3, 7, 19)?*

*தேவன் உங்களுக்காக வைத்திருக்கிற ஜீவனைப் பெற நீங்கள் என்ன செய்ய வேண்டுமென உங்களுக்கு தெரியுமா? அப்படியானால், நீங்கள் அதை செய்வதை ஒத்திப்போடவேண்டாம்! "ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதை செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமா யிருக்கும்" (யாக்கோபு 4:17).*

---

*குறிப்புகள்*

[1]Adapted from Joseph L. Gardner, ed., *Who's Who in the Bible* (Pleasantville, N.Y.:

Reader's Digest Association, 1994), 99. [2]*கணவர் உயிரோடு இருந்திருந்தால், தன் வயலை மீட்டுக்கொடுக்கும்படி அவர் அரசரிடம் மன்றாடியிருப்பார். அந்த பெண் அந்த முறையீடு செய்ய வேண்டியிருந்ததால் (2 இராஜாக்கள் 8:3, 5), அநேகமாக அவள் கணவர் மரித்துப்போயிருந்தார். அவர்கள் குடும்பம் பெலிஸ்தியாவில் இருந்தபோது அவர் மரித்திருக்கக் கூடும், வசனம் 1இல் எலிசா அந்த பெண்ணிடம் மட்டும் பேசி, உன் வீட்டாரை என குறிப்பிட்டிருப்பது, அவர்கள் பெலிஸ்தியாவுக்கு இடம் பெயர்வதற்கு முன்பே அவள் கணவர் மரித்திருந்தார் என்பதைக் காட்டுகிறது.* [3]*இது அநேகமாக 2 இராஜாக்கள் 4:38ல் குறிப்பிடப்பட்ட அதே பஞ்சமாக இருக்கிறது, இப்பகுதியை நமது அடுத்த பாடத்தில் நாம் காண்போம்.* [4]Donald J. Wiseman, *1 and 2 Kings*: *An Introduction and Commentary*, Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 213. [5]*யோராம் மற்றும் எலிசா ஆகியோருக்கிடையேயான கசந்துபோன உறவை நாம் பரிசீலிக்கையில் (காண்க 2 இராஜாக்கள் 3:13, 14), ராஜா எலிசாவைப் பற்றி அறிய விரும்பியிருந்தால், அவர் எலிசாவை வரவழைப்பதிலும் அவர் வேலைக்காரனை வரவழைப்பதை அதிகம் விரும்பியிருப்பார்.* [6]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 333. [7]Wiseman, 213. [8]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 96. [9]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 536. [10]*இது ஏழுவருட பஞ்சமாக இருந்ததால், லாபம் மிக குறைவாகவே இருந்திருக்கும்; ஆனால் யாரோ ஒருவர் கூறியபடி, "ஒன்றும் இல்லை என்பதை விட கொஞ்சம் இருக்கிறது என்பது சிறப்பானது."*